இந்தியாவிலேயே கருத்து சுதந்திரம் இருக்கின்ற ஒரு மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான்!

# தமிழக மக்களை நேசிக்கின்ற தலைவராக முதல்வர் திகழ்கிறார்!

## நச்சாத்துப்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!



புதுக்கோட்டை, டிச.2-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருமயம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் நச்சாத்துப்பட்டியில் கழக இளைஞரணி செயலாளர்,

துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ். ரகுபதி கலந்து கொண்டு உரையாற்றினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் நச்சாந்துபட்டி கிராமத்தில் திருமயம் வடக்கு ஒன்றியம் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வடக்கு ஒன்றிய செயலாளர் இரா.கணேசன் தலைமை வகித்தார். தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. சிதம்பரம் முன்னிலை வகித்தார். விழாவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தையல் மிஷின், அயன் பாக்ஸ், பொங்கல் தொகுப்புடன் பொங்கல் பானை ஆகியவற்றை வழங்கி பேசுகையில்:

மக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத கொரோனா நோய் பரவும் நிலைமையில் கழக தலைவர் தளபதி தலைமையிலான அரசு ஆட்சி தமிழகத்தில்

அமைத்தது. ஆனால் இந்தியாவிலேயே முதன் முதலாக மக்களை வீட்டை விட்டு வெளியே வர செய்தவர் முதல்வர் என்று சொன்னால் எந்த அளவிலே கொரோனா காலத்தில் விரைந்து நடவடிக்கை எடுத்து மக்களைக் காப்பாற்ற முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதை தமிழக மக்கள் அனைவரும் நிச்சயமாக மறந்திருக்க மாட்டார்கள். தமிழகத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலையை மாற்றி சாதாரண சூழ்நிலைக்கு கொண்டு வந்தவர் தான் தமிழ்நாடு முதல்வர். கொரோனா நோய் தாக்குதலின் போது மருத்துவமனையில் படுக்கை அறை இல்லை என்றால் உடனடியாக தற்காலிகமாக புதிய மருத்துவமனை ஏற்படுத்திக் கொடுத்தவர் முதல்வர் ஆவார். எனவே கொரோனா காலத்தில் இருந்து படிப்படியாக மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கடந்த ஆண்டு தீபாவளி வியாபாரம் ஆனதை போல் எந்த ஆண்டும் தீபாவளி வியாபாரம் ஆகவில்லை. கடந்த நான்காண்டு காலம் மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்துள்ளோம் என்பதற்கு இதுவே அத்தாட்சி. மக்களிடத்தில் தீபாவளி நேரத்தில் பணப்புழக்கத்தை காண முடிந்தது இதற்குக் காரணம் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்த நடவடிக்கைகள் தான். உதாரணமாக மகளிருக்கு கட்டணமில்லா பயணம் இதன் மூலம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் மிச்சப்படுத்தலாம். கையிலே ஆயிரம் ரூபாய் மகளிருக்கு உரிமை தொகை 2000 ரூபாய் மிச்சம். குழந்தைகள் கல்லூரியில் படித்தால் பெண்ணுக்கு ஆயிரம் ஆணுக்கு ஆயிரம் நான்காயிரம் ரூபாய் மிச்சம். தொடக்கப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம் இவ்வாறு தமிழ்நாடு அரசு குடும்பத்தில் பணத்தை மிச்சப்படுத்தியதால் மக்களிடத்தில் பணப் புழக்கம் அதிகம் ஆயிற்று . இந்தியா மட்டுமல்ல உலகத்திலேயே எந்த நாட்டிலும் காலை உணவு திட்டம் கிடையாது. அதைக் கொண்டு வந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர். கிராமத்தில் இருக்கும் தாய்மார்கள் காலை வேலைக்குச் செல்லும் போது குழந்தைகளுக்கு காலை உணவை கொடுத்து விட்டு செல்ல முடியவில்லை. இதனை நேரில் பார்த்த தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை அமல்படுத்தி குழந்தைகள் பசியாறவும் , நன்கு படிக்கவும் வழிவகை செய்துள்ளார். இதைத்தான் எல்லோரும் நாங்கள் ஆன்மீகத்துக்கு எதிரானவர்கள் அல்ல எங்கள் கொள்கை வேராக இருக்கலாம். ஆனால் உங்கள் கொள்கைக்கு குறுக்கீடு பவர்கள் அல்ல. நீங்கள் உங்கள் வழியில் செல்லுங்கள் அதற்கு நாங்கள் வழி விடுகிறோம் உங்கள் கருத்துக்களுக்கு நாங்கள் சுதந்திரம் தருகின்றோம். இந்தியாவிலேயே கருத்து சுதந்திரம் இருக்கின்ற ஒரு மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். என பேசினார்.

இதனைத் தொடர்ந்து தலைமை கழக பேச்சாளர் பவானி கண்ணன், சாகுல் ஹமீது கான், பூபதி உரையாற்றினார்கள்.

விழாவில் கலை இலக்கிய பகுத்தறி பேரவை மாவட்ட அமைப்பாளர் இரா.மேகநாதன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தேவி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே. ஆர்.ராமசாமி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஆர்.சிவக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோட்டூர் அருண் சேகர், டி.ராமசாமி, சே. இராஜமாணிக்கம், சுப. துரைராஜா, முல்லை ரமேஷ், ஐ.சையது உசேன், மு. ஆனந்தகுமார், கா. பொற்செல்வன், சி.சந்திரன், பி.அப்யாச்சாமி, கே.ஆர்.ஆனந்தன், ஏ. வி.எம்.வெள்ளைச்சாமி, எஸ்.சோமையா, எஸ்.பாலசுப்பிரமணியன், ஆர்.அண்ணாத்துரை, வெண்ணிலா, அழகுச் செல்வி, வி.கண்ணன், சிவக்குமார், சி.பரிமளா, அழ மணிவாசகம், சீமானூர் பி.கணேசன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய துணைச் செயலாளர் சரவணன் நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பா. நாகலிங்கம்

### டிசம்பர் 1 (2006)



கழகத்தில் 1953ஆம் ஆண்டு உறுப்பினராகி பின்னர், 1957 முதல் 1967 வரை பொன்னேரி வட்டக் கழகப் பொருளாளராகப் பணியாற்றினார்.

1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிகாலத்தில் 'மிசா' கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ்.கே. ராஜேந்திரன்

### டிசம்பர் 2 (1990)



தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர்.

இராமநாதபுரம் நகர மக்களின் பேரன்பிற்கும் பெருமரியாதைக்கும் உரியவர்.

அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் கொண்டவர்.

"இரக்கமற்ற சாவே! அடுக்குமா உனக்கு" எனக் கேட்டு தலைவர் கலைஞரை கண்ணீர் விடச் செய்தது இவரது மறைவு.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# மயிலாடுதுறை மருத்துவமனையில் பிறந்த 16 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வழங்கினார்!

மயிலாடுதுறை, டிச.2-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை பெரியார் அரசு தலைமை மருத்துவமனையில் நவம்பர் 27ம் தேதி பிறந்த 16 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் (கணையாளி) அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி நவம்பர் 27ம் தேதி பிறந்த 16 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை (கணையாழி) அணிவித்து குழந்தைகள், தாய்மார்களுக்கு பழங்கள் மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள், புத்தாடைகள், சோப், பவுடர் உள்ளிட்ட பொருட்களை வாங்கினார்.

நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக அவைத்தலைவர்கள் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என். இளையபெருமாள், ப.முருகமணி, ஞான.இமையநாதன், செல்லசேதுரவிக்குமார், மங்கை எம்.சங்கர், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயக்குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு.குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் அ.காந்தி, நத்தம் ஏ.வின்சென்ட், எஸ். கென்னடி, ஜெ.கபிலன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். கே.மருது, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.எஸ்.ஸ்ரீதர், ராஜ்குமார், வைத்தியநாதன், இரா. செல்வராஜ், பாலாஜி, துணை அமைப்பாளர்கள் சர்வோதயன், ராஜ்குமார், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகள் மலக்கோயில் பிரபாகர், ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம் நகர் மன்ற உறுப்பினர்கள் ரஜினி, ரகு, ரிஷிகுமார் மற்றும் ஆர்.கே.சரவணன், ரகு, சதீஷ், சத்தியா, சம்பத், ஸ்டாலின், மாரியப்பன், செந்தில், உள்ட்டோர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு சோழம்பேட்டையில் உள்ள அருமை இல்ல கப்பகத்தில் உள்ள ஆதரவற்ற முதியவர்களுக்கு உணவு, உடைகளை மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழக செயலாளர்கள் ஞான.இமையநாதன் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் கவி.கார்த்திகேயன், சந்திரவடிவம்ராஜா, அற்புதராஜ், மாவட்ட பிரதி நிதிகள், கே.எஸ்.கண்ணன், ஆர்.கே.சரவணன், தொ.மு.ச. போக்குவரத்துக் கழக சங்க தலைவர் இளங்கோவன் மற்றும் தமிழ்வாணன், உதயராமன், ஆர்.ஆர். பாபு, நேதாஜி, கங்காபாஸ்கர், ராகவன், ஆசைத்தம்பி, சொக்கலிங்கம், மணிமாறன், பிரபாகரன், உலக நாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நவம்பர் 27ம் தேதி பிறந்த 16 குழந்தைகளுக்கு மயிலாடுறை மாவட்டக் கழகச் செயலாளர்கள் நிவேதா எம்.முருகன் தங்க மோதிரம் (கணையாழி) அணிவித்தார். உடன் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என். இளையபெருமாள், ப.முருகமணி, மங்கை எம்.சங்கர், ஞான.இமையநாதன், ஏ.,ஜி.பிரபாகர், அமிர்த. விஜயக்குமார், செல்லசேது.ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர் அ.காந்தி, கென்னடி மற்றும் பலர் உள்ளனர்.



கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் ஆலோசனைப்படி கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் வாழப்பாடியில் உள்ள கமலாலயம் ஆதரவற்றோர் காப்பகத்தில் அறுசுவை உணவு, கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு தமிழ் மாணவர் மன்றத்தின் மூலம் கல்வி உதவித் தொகை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன் வழங்கினார். அப்போது மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. தமிழ்செல்வன் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# 24-ஆம் ஆண்டு

# நினைவு அஞ்சலி

## வறுமையில் நேர்மை!
## வளமையில் எளிமை!!




# N.V.வீரய்யன் INA
அவர்கள்

நகர தி.மு.க மு.அவைத் தலைவர்
நகரமன்ற மு.உறுப்பினர்
வர்த்தகர் சங்க மு.தலைவர்

...நீங்கா நினைவுகளுடன்...

**வீரா.கணேசன்** B.Com.,
நகர கழகச் செயலாளர்.
மன்னார்குடி.

**வீரா.கதிரவன்** M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்.
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.